**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

14.08.2025

O.S. No. 63/2022

P.W. 2 திரு. ராஜகுமார்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) -**

கிரய உடன்படிக்கை பத்திரத்தில் நான் கையொப்பம் எங்கு வைத்து, எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் பாபு பத்திர அலுவலகத்தில் வைத்து 18.04.2018 ல் கையொப்பம் செய்தேன். அந்த ஒப்பந்தத்தை நான் முழுவதும் படித்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தத்தில் மீதி கிரய தொகையை 6 மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டும் என்றும் பிரதிவாதிகள் NOC பெற்று தர வேண்டும் என்றும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரய ஒப்பந்தத்தில் அந்த ஆவணம் எழுதிய தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் மீதித் தொகையை கொடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த ஒப்பந்தம் எழுதும்போது பாபு பத்திர அலுவலகத்தில் பாபுவும், ரமேஷும் கிரய பத்திரம் எழுதும் அன்று பாக்கி தொகை செலுத்தினால் போதும் என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 கிரய ஒப்பந்தத்தில் அந்த ஒப்பந்தம் எழுதிய தேதியிலிருந்து 6 மாதம் கால அவதி என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ஆனால் பிரதிவாதிகள் அந்த காலத்திற்குள் NOC வாங்கி வாதிக்கு கிரயப் பத்திரம் எழுதி

தருவதாகதான் கூறினார்கள். வா.சா.ஆ. 1 ல் எழுதியதை தவிர வேறு எதுவும் நான் கூறுவது போல வாய்மொழியாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் செய்த தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த தேதி வரையில் வாதி மீதித் தொகை எதுவும் கொடுத்தாரா என்றால்இல்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் மேற்படி 10.492 சென்றுக்குரிய வரைமுறைப்படுத்தும் செலவுகளை 1 வது கட்சிகள் கொடுத்து கொள்ள வேண்டியதாகும் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த தொகையை வாதி இதுவரையில் செலுத்தவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் வரைமுறைப்படுத்தி கிரயப் பத்திரம் எழுதி கொடுத்த பிறகுதான் அந்த தொகை செலுத்த வேண்டும். அதுவும் அரசுக்குதான் செலுத்த வேண்டும். இந்த வழக்கில் முதன் முதலாக பிரதிவாதிகள் தான் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை வாதிக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளை நேரடியாக பார்த்துக் கொண்டிருந்தார். பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு வாதி பிரதிவாதிகளுக்கு தான் பாக்கி தொகை தர தயாராக இருப்பதாகவும் சொத்தை கிரயம் செய்து தரும்படியும் கோரி எதாவது எழுத்து மூலம் கடிதம் எதுவும் அனுப்பியருந்தாரா என்றால் இல்லை, வாய்மொழியாக கேட்டிருந்தார். தாவா ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிலத்திற்கான வரைமுறை ஒப்புதல் இதுவரையில் கிடைக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் NOC கிடைத்துவிட்டது. பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் முன்பணத் தொகையை திருப்பி தர தயாராக இருப்பதாக கூறியிருந்த விவரம் எனக்கு தொியுமா என்றால் தெரியும். வாதி பிரதிவாதிகளை பார்க்கவும் இல்லை, மீதித் தொகையை கொடுக்க முற்படவும் இல்லை, பிரதிவாதிகள்

வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகுதான் இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.